**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.**

**CC.No.40/2025**

**வழக்கு சாட்சி PW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **அஜித்** | தொழில் | : கூலி |
| தகப்பனார் பெயர் | : காமராஜ் | கணவர் பெயர் | : ------ |
| கிராமம் | : குரும்பபட்டி | இனம் | : ஆண் |
| தாலுகா | : நிலக்கோட்டை | வயது | : 29/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 22.06.2026 |

**( எதிரி ஆஜரில் உள்ளார்)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் குரும்பபட்டியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும் . தேதி நினைவில்லை. சுமார் 5 வருடங்களுக்கு முன்பு நான் கே .சி.பட்டி தாண்டி உள்ள மருமலை எஸ்டேட்டில் நான் வேலை செய்து கொண்டிருந்தபோது மாலை சுமார் சுமார் 05.30 மணியளவில் வேலையை முடித்துவிட்டு வத்தலக்குண்டுவில் உள்ள குரும்பபட்டிக்கு செல்லவேண்டி மகேந்திரா சீட்டடு வேனில் நானும், என்னுடன் சுமார் 25 நபர்கள் ஊர் செல்லவேண்டி கிளம்பினோம். நாங்கள் சென்ற வேனின் பதிவெண் விபரம் தெரியாது. வேனை ஓட்டிய நபர் யார் என்று எனக்கு நியாபகம் இல்லை. எங்கள் வாகனம் மருமலை எஸ்டேட்டில் இருந்து கிளம்பி குப்பம்மாள்பட்டி மருமலை எஸ்டேட் அருகே எங்கள் வாகனம் மிதமான வேகத்தில் வந்தபோது கே .சி.பட்டி அருகே உள்ள ஒரு திருப்பத்தின் அருகே எங்கள் வாகனம் திரும்பியபோது நாங்கள் சென்ற வாகனம் இடது புறத்தில் உள்ள

பள்ளத்தினுள் கவிழ்ந்து விட்டது . வாகனம் கவிழ்ந்ததில் வாகனத்தில் பயணம் செய்த பலருக்கும் காயம் ஏற்பட்டது , எனக்கு எந்தவித காயமும் ஏற்படவில்லை . என்னுடன் பிறந்த தம்பி ரஞ்சித் வாகனம் கவிழ்ந்த விபத்தில் உடல் முழுவதும் அடிபட்டு கிடந்தார். பிறகு வாகனத்தில் வந்தவர்கள் சேர்ந்து என் தம்பி ரஞ்சித்தை தூக்கிக்கொண்டு பெரும்பாறை அரசு மருத்துவமனைக்கு எஸ்டேட் ஜீப் மூலம் கொண்டுசென்று சிகிச்சைக்கு சேர்த்தோம். பிறகு அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக வத்தலக்குண்டுவில் உள்ள லியோ என்ற தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம் . பிறகு மேலும் மேல்சிகிக்சைக்காக வேண்டி மதுரை வேலம்மாள் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டுசென்று சேர்த்தோம் . அங்கு சிகிச்சையில் இருந்த எனது தம்பி ரஞ்சித் 3 நாட்களுக்கு பின் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் . நாங்கள் பயணம் செய்த வாகனத்தில் வந்த பாண்டியம்மாள், முத்துலட்சுமி, ஜோதி ஆகியோர்களுக்கும் காயம் ஏற்பட்டது . வத்தலக்குண்டு அரசு மருத்துவமனையில் என் தம்பி ரஞ்சித் சிகிச்சையில் இருந்தபோது அங்கு வந்த போலீசார் விபத்து சம்பந்தமாக புகார் வாக்குமூலம் பெற்றார்கள் . என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்துதான் , அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும்.

## <u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

புகார் வாக்குமூலத்தில் எழுதப்பட்டுள்ள விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான் . விபத்து நடைபெற்ற இடம் 8–9 கொண்டை ஊசி வளைவுகள் கொண்ட பகுதி என்றால் சரிதான் . விபத்து சம்பவம் நடைபெற்ற இடமான கொண்டை ஊசி வளைவுப்பகுதியில் வாகனங்கள் ஏறும்போதும் சரி , இறங்கும் போதும் சரி மெதுவாகத்தான் செல்லமுடியும் என்றால் சரிதான் . மருமலை எஸ்டேட்டில் விபத்திற்கு முன்பு நான் 1 வருட காலம்

வேலை செய்து வந்தேன் . மருமலை எஸ்டேட்டில் இருந்து கிளம்பும் வேனை ஒரே நபர் ஓட்டிச் செல்வாரா அல்லது வெவ்வேறு நபர்கள் ஓட்டுவரா என்றால் வெவ்வேறு நபர்கள் ஓட்டுவார்கள். சம்பவ தினத்தன்று நான் ஆஜர் எதிரியை வாகனத்தை இயக்கியதாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நாங்கள் சென்ற வாகனம் கவிழ்ந்த பிறகு எனக்கு வேறு என்ன நடந்தது என்று தெரியாது என்றால் சரிதான் . நான் வாகனத்தின் முன்பகுதியில் அமர்ந்திருந்தேன் . போலீசார் விசாரணையின்போது மேற்சொன்ன விசயங்களைத்தான் சொன்னேன் என்றால் சரிதான்.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.06.22 19:41:39 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.**

**CC.No.40/2025**

**வழக்கு சாட்சி PW.2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **ஜோதி** | தொழில் | : கூலி |
| தகப்பனார் பெயர் | : ----- | கணவர் பெயர் | : கருப்பையா |
| கிராமம் | : பெரும்பாறை | இனம் | : பெண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 60/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 22.06.2026 |

**( எதிரி ஆஜரில் உள்ளார்)**

**முதல் விசாரணை :**

நான் பெரும்பாறையில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன் . ஆஜர் எதிரியைத் தெரியாது . தேதி நினைவில்லை. சுமார் 5–6 வருடங்களுக்கு முன்பு சனிக்கிழமைபோல் மாலை 06.00 மணியளவில் எஸ்டேட்டில் வேலையை முடித்துவிட்டு பெரும்பாறை செல்லவேண்டி வேனில் வந்துகொண்டிருந்தபோது நாங்கள் சென்ற வாகனம் ஓரமாக சாலையில் ஒதுங்கிய போது நாங்கள் சென்ற வாகனம் சாலையோர பள்ளத்தில் கவிழ்ந்து விழுந்துவிட்டது . எதனால் விபத்து நேர்ந்தது என்ற விபரம் தெரியாது . விபத்து நேர்ந்தவுடன் நான் மயக்கம் அடைந்துவிட்டேன் . நான் கண்விழித்து பார்த்தபோது வத்தலக்குண்டு காட்டாஸ்பத்திரியில் சிகிச்சையில் இருந்தேன். விபத்தில் எனக்கு உதடு , வலது கண் புறுவம் , முதுகு தண்டுவடம் ஆகியவற்றில் காயம் ஏற்பட்டது . நான் வத்தலக்குண்டு லியோனார்டு மருத்துவமனையில் 30 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

வாகனம் கவிழ்ந்த விபரம் மட்டும் தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வேறு விபரங்கள் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக நான் மோட்டார் வாகன விபத்து இழப்பீடு வழக்கு ஏதேனும் தொடுத்துள்ளேனா என்றால் தொடுத்துள்ளேன். ஆஜர் எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல . இழப்பீடு பெறவேண்டி எதிரி மீது பதியப்பட்ட வழக்கில் புகாருக்கு ஏதுவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN
Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.06.22 19:41:46 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.

# வாக்குமூலம்
## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.
## CC.No.40/2025
## வழக்கு சாட்சி PW.3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **முத்துலட்சுமி** | தொழில் | : கூலி |
| தகப்பனார் பெயர் | : ––––– | கணவர் பெயர் | : கண்ணன் |
| கிராமம் | : சாமியார் மூப்பனூர் | இனம் | : பெண் |
| தாலுகா | : நிலக்கோட்டை | வயது | : 40/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 22.06.2026 |

**( எதிரி ஆஜரில் உள்ளார்)**

**முதல் விசாரணை:**

நான் சாமியார் மூப்பனூரில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன் . ஆஜர் எதிரியைத் தெரியும் . சுமார் 5–6 வருடங்களுக்கு முன்பு மருமலை எஸ்டேட்டில் வேலையை முடித்துவிட்டு வத்தலக்குண்டு செல்லவேண்டி சீட்டடு வேனில் மாலை 06.00 மணியளவில் கிளம்பி குப்பம்மாள்பட்டி கருப்பசாமி கோவில் அருகே உள்ள 3 வது வளைவில் எங்கள் வாகனம் சென்றுகொண்டிருந்தது. நான் துாக்கத்தில் இருந்தேன் . நான் கண்விழித்து பார்த்தபோது நான் சென்ற வாகனம் விபத்திற்குள்ளாகி சாலையின் வலது பக்க பள்ளத்தில் கவிழ்ந்து கிடந்தது. விபத்தில் எனது இடது கையும் , வலது காலும் எழும்பு முறிவு ஏற்பட்டது . பிறகு அங்கிருந்தவர்கள் கூடி என்னையும் , காயம் பட்ட நபர்களையும் ஒரு வேனில் ஏற்றி வத்தலக்குண்டு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டுசென்றார்கள் . பிறகு அங்கிருந்து காட்டாஸ்பத்திரிக்கு சிகிச்சைக்கு கொண்டு சென்று சேர்த்தார்கள். நான் வத்தலக்குண்டு காட்டாஸ்பத்திரியில் 10 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன் .

என்னுடன் வ வாகனத்தில் பயணம் செய்த நபர்களுக்கும் காயம் ஏற்பட்டது என்ற விபரம் எனக்குத் தெரியும் . நாங்கள் சென்ற வாகனத்தை ஓட்டிய நபர் யார் என்று தெரியாது . போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளைத் தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். விபத்து நேரும் முன்பு வரை நான் தூங்கிக் கொண்டிருந்ததால் எதனால் விபத்து நேர்ந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான் . விபத்து இழப்பீடு கோரி வழக்கு ஏதேனும் தொடுத்துள்ளேனா என்றால் வழக்கு தொடுத்துள்ளேன் . இழப்பீடாக ரூ.10,000/– பெற்றேன். வழக்கிற்கும், ஆஜர் எதிரிக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றாலும் , விபத்து நஷ்ட ஈடு பெறவேண்டி கொடுக்கப்பட்ட பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.06.22 19:41:51 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.